நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 12 சனிக்கிழமை (26-06-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 210

# பூநகரி - பரந்தன் பாதை திருத்தம்: அடுத்த வாரம் வேலைகள் ஆரம்பம்

## தயாராக 200 பரல் தார் கிளிநொச்சி வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 26

போக்குவரத்துக்கு சேதமடைந்த நிலையில் உள்ள பரந்தன்—பூநகரி வீதியை திருத்தும் வேலைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பூநகரி — கேரதீவு பாதை திறக்கப்படும் பட்சத்தில் இவ்வீதி வழியான போக்குவரத்து சீராக நடைபெறுவதை உறுதிப்படுத்தும் முன்னோடி நடவடிக்கையாகவே இவ்வீதி திருத்தப்படவிருக்கிறது.

முறிகண்டியில் இருந்து பூநகரி — நல்லூர் வரையான போக்குவரத்துப் பாதை பல காலமாக சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

அப்பாதையூடான போக்குவரத்தை சீர் செய்யும் வகையில் அப்பாதையை இருகட்டங்களில் திருத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

முதல்கட்டமாக முறிகண்டியில் இருந்து பரந்தன் வரையான பாதையும்—

இரண்டாம் கட்டமாக பரந்தனின் இருந்து நல்லூர் வரையான பாதையும் திருத்தப்படவிருக்கின்றன.

இப்பாதை திருத்த வேலைக்காக 200 பரல் தார் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பூநகரி — கேரதீவு பாதை திறக்கப்படும் பட்சத்தில், வாகனங்கள் சென்றுவர வசதியாக இப்பாதையின் திருத்த வேலைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-ந)

## எரிபொருளுடன் 'றுகுணு'; வாதுவவில் உணவுப்பொருள்

### நாளை வந்து சேரும்

டீசல், மண்எண்ணெய், போன்ற எரிபொருள்கள் மற்றும் என்ஜின் ஒயில், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றுடன் ''றுகுணு'' கப்பலும்—

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'வாதுவ' கப்பலும்—

நாளை காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இருந்து இவ்விரு கப்பல்களும் ஒன்றாக பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டதாகவும்—

நாளை காலை அவை பருத்தித்துறையை வந்தடையும் எனவும்—

நேற்று மாலை தகவல் கிடைத்தது.

''றுகுணு'' கப்பலில் இருந்து இரண்டு மூன்று நாட்களில் பொருள்களை இறக்கி முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ-3)

## காங்கேசன் சிமெந்து ஆலை 15-ம் திகதியுடன் மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜூன், 26

சிமெந்துக் கூட்டுத்தாபன காங்கேசன்துறை தொழிற்சாலை அடுத்த மாதம் 15 ஆம் திகதியுடன் மூடப்படவிருக்கிறது.

மேற்கண்ட தகவலை சிமெந்துக் கூட்டுஸ்தாபன நிர்வாகம் தொழிற்சாலை ஊழியர்களின் தொழிற்சங்கத்துக்கு அறிவித்துள்ளதாக அறியவருகிறது.

தொழிற்சாலையில் கடமையாற்றும் ஊழியர்கள், தொழிலாளர்கள் சுயவிருப்பத்தின் கீழ் இளைப்பாறும் திட்டத்திற்கு அமைய இளைப்பாற விரும்பினால், அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கு முன் அதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## ஐ. நா. தூதரக அதிகாரிகள் செவ்வாய் யாழ். வருகை

பூநகரிப் பாதை விவகாரம்:

யாழ்ப்பாணம், ஜூன் 26

பூநகரிப் பாதை ஊடாக உணவு வாகனங்களை அனுமதிப்பது பற்றி மேலும் பேச்சுக்களை நடத்துவதற்காக அகதிகளுக்கான ஐ நா. தூதரக உயர் அதிகாரிகள் இருவர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் இலங்கைக்கான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரசேகர மீண்டும் இன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 26

ஜனாதிபதி விஜேதுங்காவின் விசேட தூதுவரான பிரிகேடியர் ஆனந்த வீரசேகர மீண்டும் இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார். அவருடன் யாழ். அரச அதிபர் திரு கே. மாணிக்கவாசகரும் வருகிறார்.

விமானம் மூலம் பலாலிக்கு வந்து சேரும் இவர்கள் இருவரும் இன்று காலை 7.30 மணியளவில் கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைவர்.

அங்கிருந்து யாழ்வரும்பிரிகேடியர் வீரசேகர, தமிழீழவிடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் இன்று காலை பேச்சுக்களை நடத்துவார். (ஒ-3)

## கிளிநொச்சிக்கு 2 பவுஸர்களில் பெற்றோல் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம்' ஜூன் 26

தரைமார்க்கமாக எடுத்து வர முடிவு செய்யப்பட்ட ஐந்நூறு பரல் பெற்றோலில் ஒரு பகுதி இரண்டு பவுஸர்களில் நேற்று மாலை கிளிநொச்சிக்குக் கொண்டு வரப்பட்டதாக அறிய வந்தது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரின் பாதுகாப்புடன் தரை வழியாக எடுத்து வரப்பட்ட இரு பவுஸர் பெற்றோலும் கிளிநொச்சி அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பெற்றோல் இலகுவாகத் தீப்பற்றக் கூடிய தன்மையுடையது என்பதால் பெற்றோல் பரல்களை கொழும்பிலிருந்து கப்பலில் பருத்தித்துறைக்கு ஏற்றிவருவதற்கு கப்பல் ஏஜென்ஸிகள் மறுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## சிவாஜி கணேசன் ராஜினாமா

தமிழ்நாடு ஜனதாதள கட்சித் தலைவர் சிவாஜி கணேசன் அந்த கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். தமது ராஜினாமா பற்றிய தகவலை சிவாஜிகணேசன்தஞ்சாவூரிலிருந்து கட்சித் தலைவர் எஸ். ஆர். பொம்மைக்கும் முன்னாள் பிரதமர் வி.பி சிங்கிற்கும் அனுப்பியிருக்கிறார்.

கட்சியின் மாநில அமைப்புக்கு நடந்த தேர்தலில் கட்சி மேலிடம் முறையற்ற வகையில் தலையிட்டதை அடுத்து தாம் ராஜினாமா செய்வதாக சிவாஜிகணேசன் கூறியுள்ளார். (உ-க)

## அமெரிக்க பொஸ்ரன் நகரில் தமிழீழ தேசியக் கொடி!

நியூயோர்க், ஜூன் 26

அமெரிக்காவின் பொஸ்ரன் நகரில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

கடந்த மே மாதம் 22 ஆம் திகதி இடம் பெற்ற இந்த கொடி ஏற்றும் நிகழ்வில் பொஸ்ரன் நகரமேயர் சுப்புவானவும் கலந்து கொண்டார்.

அமெரிக்க தேசியக் கொடியோடு சேர்த்து தமிழீழக் கொடியையும் அவர் நகர சபை மைதானத்தில் ஏற்றினார்.

சிவப்பு, மஞ்சள் நிறங்களைக் கொண்ட இக்கொடியில் இலங்கையின் வடக்கு—கிழக்கு மாகாணத்தைப் பிரித்துக் காட்டி 'தமிழீழம்' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தி. மு. கவிலிருந்து 'நாஞ்சில்' வெளியேற்றப்பட்டார்!

சென்னை, ஜூன் 26

தி.மு.க.வில் இருந்து நாஞ்சில் மனோகரன் வெளியேற்றப்பட்டார்.

தி. மு. கவின் துணைப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் நாஞ்சில் மனோகரன் வெளியேற்றப்பட்டார் என்று தி.மு.க செயலாளர் க.அன்பழகன் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

கட்சிக்கு எதிரான நடவடிக்

( 8 ஆம் பக்கத் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோடி ரூபா லஞ்சமாகப் பெற்றார்:

# ராவ் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க மேத்தாவுக்கு 4 நாட்கள் அவகாசம்

புதுடில்லி, ஜூன் 26

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு ஒருகோடி ரூபாவை லஞ்சமாக வழங்கியதாக ஹர்ஷத் மேத்தா கூறிய குற்றச்சாட்டை நிரூபிப்பதற்காக—

அவருக்கு நான்கு நாள் அவகாசத்தை நாடாளுமன்றக் கூட்டுக்குழு வழங்கியுள்ளது.

இதற்கிணங்க ஹர்ஷத் மேத்தா எதிர்வரும் 30 ஆம் திகதி தமது சாட்சியங்களுடன் ஆஜராவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாட்சியங்களை — ஆதாரங்களைச் சமர்ப்பிப்பதற்காகத் தம்மிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 21 ஆவணங்களையும் மீள ஒப்படைக்குமாறு மேத்தா மத்திய விசாரணைப் பிரிவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்,

மேற்படி ஆவணங்களில் தொலைபேசி நாட்குறிப்பு, நானாற்தப் பணி பற்றிய நாட்குறிப்பு, பணம் சம்பந்தமான குறிப்பேடு ஆகியனவும் அடங்குகின்றன என்று இந்தியப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இந்த ஆவணங்கள் மூலம் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்ததற்கான ஆதாரத்தை மேத்தாவால் நிரூபிக்க வாய்ப்பு உண்டு என்று சில பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன என்று வெரித்தாஸ் சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## ராவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஜூன் 26

பிரதமர் நரசிம்மராவ் மீது லஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பதை அடுத்து அவரை பதவி விலகக் கோரி, ஜனதாதள் உறுப்பினர்கள் நேற்று புதுடில்லியில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

நாலாயிரத்துக்கும் மேற்பட்டோர் இப்பேரணியில் கலந்து கொண்டனர் என்றும், பொலீஸார் பேரணியில் சென்ற பலரை கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

# அர்ஜுன்சிங் - சரத் பவார் ரகசியமாக சந்தித்து பேச்சு

## இந்திய அரசியலில் பரபரப்பு

புதுடில்லி, ஜூன் 26

மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் சரத்பவாரும் மத்திய மனித மேம்பாட்டுதுறை அமைச்சர் அர்ஜுன் சிங்கும் இரகசியமாக சந்தித்துப் பேசியதாக அறிவிக்கப்படுகிறது.

அர்ஜுன் சிங்கின் வீட்டில் நடந்த இச்சந்திப்பு ஒன்றே கால் மணிநேரம் நீடித்தது. இருவரும் என்ன பேசினார்கள் என்ற விவரம் வெளியாகவில்லை.

பிரதமர் நரசிம்மராவின் அதிருப்தியாளர்களில்— அமைச்சர் அர்ஜுன்சிங் முக்கியமானவர் என்பதும், முதலமைச்சர் சரத்பவாரும் ராவுக்கு மறைமுக அரசியல் எதிரி என்பதும் தெரிந்தவையே.

இவர்களின் சந்திப்பை அடுத்து இந்திய அரசியல் வட்டாரங்களில் பல்வேறு ஊகங்கள் அடிபடத் தொடங்கியுள்ளன. இவர்களின் ரகசிய பேச்சு முக்கியத்தும் வாய்ந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குஜராத் முதலமைச்சர் சிமன்பாய் பட்டேலும் அர்ஜுன் சிங்கை சந்தித்துப் பேசியுள்ளார் என்றும் தெரியவருகிறது.

இதற்கிடையில் சோனியா காந்தியின் தனிச்செயலாளர் டி. ஜோர்ஜும் அர்ஜுன்சிங்கைச் சந்தித்துப் பேசியதாகக் கூறப்படுகின்றது. சோனியாவிடம் இருந்து ஒரு தகவலை அவர் அர்ஜுன் சிங்குக்கு கொண்டு வந்து இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பங்குச்சந்தைப் பேர ஊழலின் சூத்திரதாரி ஹர்ஷத் மேத்தா பிரதமர் நரசிம்மராவிற்கு ஒருகோடி ரூபாவைத் தாம் கொடுத்ததாக கூறியதைத் தொடர்ந்து, இச் சந்திப்புகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.


வலி. வடக்கு பிரதேச சபை

காங்கேசன்துறை (மல்லாகம்)

## கேள்வி விளம்பரம்

09-07-93 திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிவரை வீதி அமைப்பு வேலைகள், தளபாடங்கள்/ விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு ஆகியவற்றிற்கான கேள்விகள்/ கூறுவிலைகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் ஒவ்வொரு வேலைக்கும் வைப்புப் பணம் ரூபா 250/- உம், கிரயப்பணம் ரூபா 100/- உம் செலுத்தி 07-07-93 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்பு வலிகாமம் வடக்கு பிரதேசசபை தலைமைப் பணிமனையில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,

காங்கேசன்துறை.

பிரதேசபை தலைமை அலுவலகம்,

96, யாழ். வீதி,

மல்லாகம்.

24-6-1993. (சி/5406)


வடக்கு - கிழக்கில்

# ஆயுதப் படையினர் 60 நாட்கள் ஆட்களை தடுத்து வைக்கலாம்

## புதிய அவசரகால விதிகளின் கீழ்

திருத்தியமைக்கப்பட்ட புதிய அவசரகால ஒழுங்கு விதிகளின்படி—

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் ஆயுதப் படையினர் பிரிகேடியர், கடற்படைகொமடோர் அல்லது விமானப்படை விங்கொமாண்டர் ஒருவரின் உத்தரவின் மீது 60 நாட்களுக்கு மேற்படாத காலத்துக்கு ஆட்களைத் தடுத்து வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இக்காலத்துக்கு மேல் ஒருவரைத் தடுத்து வைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரிடம் இருந்து தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தடுப்புக்காவல் உத்தரவு ஏழு தினங்களுக்குள் பெறப்படவேண்டும் என்றும்—

வடக்கு கிழக்கு பகுதிகள் தவிர்ந்து நாட்டின் ஏனைய பகுதிகளில் தடுப்புக் காவல் உத்தரவு 48 மணித்தியாலங்களில் பெறவேண்டும் என்றும் புதிய ஒழுங்கு விதிகள் கூறுகின்றன.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் தடுப்புக் காவல் உத்தரவு பெறப்படாவிட்டால், சந்தேகநபர்கள் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் புதிய ஒழுங்கு விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாஞ்சில் மனோகரன்

# கருணாநிதியைக் கிண்டல் செய்ததால் வெளியேற்றம்

சென்னை, ஜூன் 26

தி.மு.க. ஆதரவு நாளிதழான தினகரனில் நாஞ்சில் மனோகரன் எழுதிய கவிதை ஒன்று பிரசுரமானது.

அக்கவிதையில் —

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பரம்பரை ஆட்சியைப் பேணும் ஆசையை நாஞ்சில் மனோகரன் நையாண்டி செய்திருந்தார்

இதுவே நாஞ்சில் மனோகரன் தி.மு.கவில் இருந்து திடீர் என்று வெளியேற்றப்பட்டதற்கான காரணங்களில் முக்கியமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கலைஞர் கருணாநிதி தி.மு.கவின தலைமைப் பதவிக்கு தமக்கு அடுத்ததாக தமது மகனான மு.க. ஸ்டாலினை தயார் செய்து வருவதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

ஆனால் கட்சியில் அதிகளவு இளைஞர் ஆதரவைப் பெற்ற வை கோபாலசாமியே கலைஞருக்குப் பின் கட்சியின் தலைமைப் பதவியைபொறுப்பேற்க வேண்டும் என கட்சியின் பெரும்பாலானஉறுப்பினர்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)


## கண்ணீர் அஞ்சலி



திரு. முருகேசு விஜயரத்தினம் (V.V)

(சுபமாலா மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்)

ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு

திடீரென எமைவிட்டுப் பிரிந்ததேனோ!

நண்பா.........

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சதாஸ் மோட்டோர்ஸ்

முருகன் மோட்டோர்ஸ்

யாழ்ப்பாணம். இராசம் மோட்டோர்ஸ்

நியூ ஸ்ரான்லிஸ்

(6293) ஜெகன் போட்டோ


# ஆயுதப் போராட்ட பிரச்சினைக்கு ஓர் அமைதித் தீர்வு காணவேண்டும்

## பாரிஸ் மாநாட்டில் ரணில்

பாரிஸ், ஜூன் 26

"தமிழ் மக்கள் தமது சொந்த வாழ்க்கைப் பாதையைத் தீர்மானிப்பதற்கும் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அவர்களது திறமையைப் பயன்படுத்துவதற்கும் நாம் உதவ வேண்டும். இதற்கு வடக்கு-கிழக்கில் காணப்படும் ஆயுதப் போராட்டப்பிரச்சினைக்கு ஓர் அமைதியான தீர்வு காணப்படவேண்டும்".

இப்படிக் கூறியுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பாரிஸில் நடந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"இலங்கை இனப்பிரச்சினைக்கு கௌரவமானதும், இறுதியுமான ஒரு தீர்வைக் காண்பதற்கு அங்கீகரிக்கக் கூடிய ஓர் இணக்கம் அவசியமானதாகும். எனவே இவ்வாறான ஓர் இணக்கத்தின் அடிப்படையிலான அமைதித் தீர்வொன்றைக் காண்பதற்கான எமது முயற்சிகளை நாம் தளர்த்தப்போவதில்லை.

"சிறுபான்மையினரை ஒடுக்குவதன் மூலமாகவோ அல்லது பெரும்பான்மையினரின் தலைகளின் மீது முரட்டுத்தனமாகச் சவாரி செய்வதன் மூலமாகவோ சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது என்பதை சரித்திரமும் உலகின் பல நாடுகளிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களும் காண்பிக்கின்றன.

"இந்த ஆயுதப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படுவது நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மக்களுக்கும் நன்மை பயப்பதாகவே இருக்கும். வடக்கு - கிழக்கில் ஏற்படக்கூடிய பொருளாதார வளர்ச்சி நாட்டின் ஏனைய பகுதி நலன்களுக்கும் பங்களிப்புச் செய்வதாகவே இருக்கும்"— என்றார்.

(ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இன் நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உரிய நேரத்தில் வடக்கே பாரிய ராணுவ நடவடிக்கை

## புலிகளைச் செயலி இழக்க வைப்பதே நோக்கமாம்

## ஹமில்டன் வனசிங்க கொழும்புப் பத்திரிகைக்கு பேட்டி

கொழும்பு, ஜூன் 26

உரிய காலம், உரிய நேரம் வரும் போது வடக்கே மீண்டும் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கொழும்பில் இருந்து வெளிவரும் ''தினமுரசு'' (20-6-93) இதழுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தினமுரசு பிரதம ஆசிரியருக்கு தொலைபேசி மூலம் அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

வடக்கே பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்படும் போது செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு போன்ற அமைப்புகளோடு பேசி பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துவோம். ஈ.பி டி.பி. மற்றும் புளொட் போன்ற தமிழர் அமைப்புகளும் எமக்கு உதவத் தயாராக உள்ளன. அவற்றின் உதவியைப் பெறுவோம்.

கேள்வி: புலிகள் ஜனநாயக வழிக்கு வருவார்கள் என்று நம்புகிறீர்களா? இதுவரை கால அனுபவத்தில் உங்கள் தனிப்பட்ட கருத்து என்ன?

பதில்: அது குறித்துப் பல சந்தேகங்கள் உண்டு. எங்களைப் பொறுத்தவரை அவர்களை முழுமையாகச் செயலிழக்கச் செய்வதே ஒரே வழி.

கேள்வி: பிரேமதாசாவின் மறைவின் பின்னர் இராணுவ திட்டங்களில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா?

பதில்: இல்லை. திட்டமிட்டபடி பாதுகாப்புப்படையினர் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றனர்.

கேள்வி: இராணுவ நடவடிக்கைகளில் தற்போது ஒரு மந்தநிலை காணப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே.

பதில்: எம்மைப் பொறுத்தவரை நாம் ஒரு திட்டத்தின் அடிப்படையில் செயற்படுகிறோம். சில சந்தர்ப்பங்களில் எமது நடைமுறைத் தந்திரங்கள் காலநிலை போன்ற பூகோளச் சூழல்களால் சற்றுத் தாமதமடையலாம்.

கேள்வி: தற்போதைய யுத்தத்தில் புலிகள் தங்களுக்கு வெற்றி என்கிறார்களே.

பதில்: அவர்களின் பிடியில் இருந்த பல பகுதிகளை விடுவித்துள்ளோம். உண்மையாகவே தமக்கு வெற்றி என்று கூறவேண்டுமானால் அந்தப் பகுதிகளை அவர்கள் மீண்டும் தம்வசப்படுத்தி இருக்க வேண்டும்.

கேள்வி: பகுதிகளைக் கைப்பற்றுவதைவிட ஆயுதங்களை கைப்பற்றுவதேதமதுநோக்கம் என்று புலிகள் சொல்கிறார்களே. அந்த நோக்கத்தில் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார்களா?

பதில்: சில தாக்குதல்களில் அவர்கள் பெருவெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை மறுக்க முடியாது.

கேள்வி: இந்தியப் படையின் உதவியை மீண்டும் பெறவேண்டும் என்று நினைக்கிறீர்களா?

பதில்: அது பற்றிய பேச்சுக்கு இப்போது அவசியம் இல்லை. எனினும் எமக்கான உதவிகளை நாம் வரவேற்போம்

(இ-1)

## வலி-வடக்கு செயலர் பிரிவில் புதிய பங்கீட்டு அட்டைகள்

வலி- வடக்கு பிரதேச செயலர் பிரிவின் சில பகுதிகளில் இருந்து ராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்தவர்களுக்கும்— இவை தவிர்ந்த வலி- வடக்கின் ஏனைய பகுதிகளில் இடம்பெயராமல் தங்கி இருப்பவர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான புதிய பங்கீட்டு அட்டைகள் தற்போது விநியோகிக்கப் பட்டுவருகின்றன.

பங்கீட்டு அடிப்படையில் பொருள்களின் விநியோகத்தை இலகுவாக்குவதற்கே இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிய பங்கீட்டு அட்டைகளுக்கு மண்ணெண்ணெய், சீனி போன்ற பொருள்கள் சம அளவில் அனைத்துக் குடும்பங்களுக்கும் விநியோகிக்கப்படும்.

அந்த அந்தப் பகுதி கிராம சேவகர்கள் மூலம் புதிய பங்கீட்டு அட்டைகள் விநியோகிக்கப்படும். ஒவ்வொரு குடும்ப அங்கத்தவர்களும் 5 ரூபா செலுத்தி இதனைப் பெற்றுக்கொள்ளலாம என்று அறிவிக்கப்படுகின்றது.

(த-152-162)

### படிவம்

யாழ். உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அடையாள அட்டை படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவையாளர்களுக்கே இந்த படிவம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டு வருகின்றன

# இறந்துபோன உடன்பாட்டின் சிதைந்துபோன சின்னங்கள்

## சர்வசன வாக்கெடுப்புக் குறித்து 'சண்டே ரைம்ஸ்'

கிழக்கில் நடத்தப்படவுள்ள சர்வசன வாக்கெடுப்பை பெரும்பாலும் எல்லாத் தரப்பினரும் நிராகரித்து உள்ளனர். இந்த சர்வசனவாக்கெடுப்பை நடத்துவது என்ன நோக்கத்தை நிறைவேற்றும் அல்லது யாருக்கு அது பயனளிக்கும் என்பது குறித்து நாம ஆச்சரியப்படுகின்றோம்.

கல்லறைக்கு வெள்ளை அடிப்பதிலும் பார்க்க, அதிகாரப்பரவலாக்கல் அலகு உட்பட இனப்பிரச்சினை பற்றிய முழு அணுகுமுறையையும் மீள் பரிசீலனை செய்ய நாட்டுத் தலைவர் (Statesmanship) என்ற உணர்வுடன் புதிய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவும் அவரது புதிய அரசாங்கமும் முன்வருவது நல்லது என்று நாம் எண்ணுகின்றோம்.

இவ்வாறு 'சண்டேரைம்ஸ்-(26-06-1993] தனது Greasy' poll என்ற தலைப்பிலான ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

உத்தேச சர்வசனவாக்கெடுப்பு புரிந்துணர்வின் புதிய வேகத்தையும் சகிப்புத் தன்மையையும் சீர்குலைக்கக் கூடும் என்ற அமைச்சர் தொண்டமானின் எச்சரிக்கையை பாரதூரமாகக் கவனிக்க வேண்டியுள்ளது.

உத்தேச சர்வசனவாக்கெடுப்பு முஸ்லிம்களை குழப்பத்துக்குள்ளும் சகதிக்குள்ளும் மாட்டிவைத்துள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

சர்வசனவாக்கெடுப்பில் எந்தப் பக்கத்துக்கு வாக்களித்தாலும் முஸ்லிம்களின் நிலை இதுதான் என்று அக்கட்சி கூறியுள்ளது,

இணைப்புக்கு எதிராக வாக்களித்தால் எல்லைக்கிராமங்களில் விடுதலைப் புலிகளின் கோபத்துக்கு முஸ்லிம்கள் ஆளாகவேண்டியிருக்கும்.

இணைப்புக்கு ஆதரவாக வாக்களித்தால் பெரும்பான்மை இன மக்கள் முஸ்லிம்கள் மீது வைத்துள்ள நம்பகத்தன்மை மற்றும் நல்லுறவு கேள்விக்குரியதாகிவிடும் — என்று முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது.

சர்வசன வாக்கெடுப்பை பெரிய தமிழ்க் கட்சிகளும் எதிர்க்கின்றன. விடுதலைப் புலிகளும் இதனை ஆக்ரோஷமான தங்கள் செயற்பாடுகளினால் எதிர்ப்பார்கள். பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு இந்த சர்வசன வாக்கெடுப்பு 1987 இல் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட கசப்பான உணர்வுகளை மட்டுமே மீண்டும் நினைவு படுத்தும்.

திடீர் இணைப்பையும் அது தொடர்பான சர்வசன வாக்கெடுப்பையும் இறந்துபோன உடன்பாட்டின் சிதைந்து கொண்டிருக்கும் சின்னங்களாக, சிங்கள மக்களின் பெரும்பான்மையோர் கருதுகின்றனர்

—இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்'' தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை மேற்கு
ஸ்ரீவதரிபீட தண்டாயுதபாணி
சுவாமி
ஆலய வருடாந்த
அலங்கார உற்சவத்தை
முன்னிட்டு
தெய்வீக பேருரைகள்
நடைபெறும்.
26 06·1993 தொடக்கம் 07 07–1993 வரை
12 நாட்கள் தினமும் 5-15 மணி தொடக்கம் 6-15 மணி வரைக்கும்
''கந்தன் பெருமை'' தொடர் விரிவுரை
26-06-1993 — 27 06 1993 வரை
ஆகிய இரு தினங்களும்
செல்வன் வ. ஸ்ரீபிரசாந்
(யாழ் இந்துக் கல்லூரி மாணவன், கம்பன் கழக உறுப்பினர்)
28-06-1993 தொடக்கம் 07-07-1993 வரைக்கும்
பத்துத் தினங்கள்
''சிவனருட் செல்வன்'', ''செஞ்சொற் கொண்டல்''
ஆறு. திருமுருகன் (B. A.)
(ஆசிரியர், ஸ்கந்தவரோதயா கல்லூரி, கம்பன் கழக உறுப்பினர்)
கொழும்புத்துறை மேற்கு-
இந்து இளைஞர் மன்ற நிர்வாகத்தினர்.
(26244)

கண்ணீர் அஞ்சலி
25-06-93 இறைவனடி சேர்ந்த எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினரும், பாடசாலை மாணவியின் தந்தையுமான
முருகேசு விஜயரத்தினம்
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர்
ஆரம்ப பாடசாலை.
(26252)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
தோற்றம்: 11 — 12 — 1933

மறைவு: 26 — 06 — 1992
திருமதி சந்திரா மயில்வாகனம்
எங்களைப் பெற்று வளர்த்து, ஆளாக்கிய எங்கள் அன்புத் தெய்வம் எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து, ஓராண்டு சென்றாலும் எங்கள் உள்ளங்களில் ஒளியாய் வீற்றிருக்கும் தெய்வம் நீங்கள் அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசுக் கிறீஸ்துவை வேண்டிக் கொள்கின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன், மக்கள், மருமகன்
இல 45, 4ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.
(6278)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தரமான, தெளிவான G.C.E. (O/L) English Literature கவிதைத் தொகுதிகளுக்குரிய குறிப்பு- வினா - விடை கவிதைகளுடன் கூடிய அச்சிட்ட நூல். விலை ரூபா 65. ஆக்கியோன்: த. ந. பஞ்சாட்சரம், புத்தகநிலையங்களிலும் New Science Hall கன்னாதிட்டியிலும் பெறலாம்.
(சி-5328)

சுத்தமான பசுப்பால், தயிர், தரமான கோழித்தீன், கல்சியப் பவுடர் (பிக்குற்றின்) பெற்றுக்கொள்ள உடன் தொடர்பு கொள்ளுங்கள்: யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி-5330]

அழகிய பொமனேரியன் வெள்ளை நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(26251)

## G.C.E. O/L வினா-விடை

உயர் கல்விச்சேவை நிலையத்தின் கடந்தகால வினா-விடை 1992 உட்பட சகல பாடங்களும், 5ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சைக்கான வினா-விடையும் விற்பனையாகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கு அருகில்.)
(சி-5326)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உடன் விடை கிடைக்கும். ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் அனைத்துக்கும் தொடர்பு: டாக்டர் த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.
(26231]

## மாற்றம்

இதுவரை காலமாக 32. கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
(6245)

## EMPLOYMENT WANTED

Sales Manager with more than 10 Years Experience in Administration, Stock control, stores control and Accounts work, seeks suitable employment reply to C/o No. 910, Uthayan.
(6286)

## இலவச திருமணசேவை

28 வயது, உத்தரம், கனடாவில் தொழில்புரிபவருக்கு அழகான மணப்பெண் தேவை. இலங்கைத் திருமணம். கனடா மணப்பெண்ணும் விண்ணப்பிக்கலாம். மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி.
(26203)

## மணமகள் தேவை

பிரான்ஸில் தொழில்புரியும் 34 வயது, சித்திரை 2ஆம் பாதம் மணமகனுக்கு உடனடியாக மணமகள் தேடுகிறார்கள். கொழும்பில் வந்து மணவிழா நடத்தமுடியும். மணமகள் பிரான்ஸ் செல்லவேண்டும். சீதனம் அதிகம் எதிர்பார்க்கப்படவில்லை. பொருத்தமான குறிப்புடன் உடன் விண்ணப்பிக்கவும். இல. 533, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [26208]

## தவறிவிட்டது

12-06-1993 அன்று அந்தோனியார் கோவில் கடைசி ஆராதனையின்போது (வேஸ்பர்) சங்கிலியில் இருந்து ஒரு பென்ரன் தவறிவிட்டது. (இதயவடிவமானது) இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்திற்கு கையளிக்கவும், சன்மானம் வழங்கப்படும். V. ஞானப்பிரகாசம், 58, எழிலூர், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (26241)

ஓக்ஸ்போட் கார் புதிய வீல்கப் 25-06-1993 காலை நல்லூர் முடமாவடிக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். சூட்டி மோட்டார் சைக்கிள் பழுது பார்ப்பவர், நல்லூர் வடக்கு, முடமாவடி. (26253)

சே. சோமசுந்தரம் ஆகிய எனது அடையாள அட்டை (232400544V) மின்சார நிலைய வீதியில் 'கிளின் கட்டிடத்துக்கு' முன்பதாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வடிவேல் வோச் வேக்ஸ், யுபிலி பசார் எனும் முகவரியில் சேர்ப்பிக்கவும். (6289)

## வெளிவந்துவிட்டது

கைவண்ணக்கலைகள் சித்திரப் புத்தகம் நுண்கலைப் பரீட்சை, A/L இந்துநாகரீகம் ஆண்டு 10, 11 பாடத்திட்டத்துக்கமைய சித்திரம் கற்கும் மாணவர்களுக்கு உகந்தது. ஆசிரியர்: நா. முத்தாலிங்கம், சாவகச்சேரி. கிடைக்குமிடம்: ஜே. எஸ்.ரி., ஸ்ரேசனறி, 15, கண்டி வீதி, சாவகச்சேரி, (கோட்டடி) சுரேகா புத்தகக் களஞ்சியம், இல. 25 பஸ்நிலையம், யாழ்ப்பாணம். சி-5405)

சகல A/L விஞ்ஞான பாடங்களுக்குமான கடந்த கால வினா-விடை புள்ளி விவரத்துடன் விற்பனைக்குண்டு. மேலும் விவரங்களுக்கு: 'A' Level Centre, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-4720)

## நாகபூஷணி படம்

நயினை நாகபூஷணிஅம்மன் படம் பிறேம் செய்து விற்பனையாகிறது. விலை ரூபா 125/-. கிடைக்கும் இடம் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(5327)

## கொள்வனவு

எமது தொழிற்சாலை உற்பத்திக்குத் தேவையான தவிடு, எள்ளுப்பிண்ணாக்கு அரைத்த சோளம், கால்நடைத்தீன் தயாரிப்பதற்கு உகந்த அரிசி, மா, பருப்பு. பயறு என்பன தேவை. வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(சி-5331)

---

அகில இலங்கை
இளங் கலைஞர் மன்றம்

## ★ மாதாந்த இசை நிகழ்ச்சி ★

"போஸ்கோ ஸ்தாபனம்"
(3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.)
ஆதரவில்

இடம்: மன்றக் கலாமண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம் 27 — 06 — 1993 ஞாயிற்றுக்கிழமை
மாலை 5:00 மணி

### நிகழ்ச்சி நிரல்

மாலை 5.00 — 5.45 வயலின் இசை
செல்வி உஷா பரமரட்சகபாலன் — வயலின்
செல்வி சாந்தினி சஞ்சீவராசா — வயலின்
திரு. க. கண்ணதாசன் — மிருதங்கம்

மாலை 5.45 — 6.45 இசைக் கச்சேரி
திருமதி ஞானகுமாரி சிவநேசன் — பாட்டு
செல்வன் எஸ். கோபிதாஸ் — வயலின்
திரு. எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
திரு. எஸ். துரைராசா — கெஞ்சிரா

மாலை 6.45 7.15 மங்கள விளக்கேற்றல்
1. திரு. ஆ. பஞ்சாட்சரலிங்கம்,
உரிமையாளர்: கமலேஸ்வரி வர்த்தக நிலையம்,
யாழ்ப்பாணம்.
2. திரு. சு. தனபாலசிங்கம்,
உரிமையாளர்: ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்,
திருநெல்வேலி.

தலைமையுரை: அருட்திரு அ. இ. பேணாட்,
(அதிபர், யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி)

பிரதம விருந்தினர் உரை:
கலாநிதி சோ. கிருஷ்ணராஜா
(தலைவர், மெய்யியற்துறை யாழ். பல்கலைக்கழகம்)

இரவு 7.15 — 8.45 சிறப்பு நிகழ்ச்சி:
பரதநாட்டியம்
★ நாட்டியக் கலைமணி பரதகலா வித்தகர்,
செல்வி மைதிலி அம்பலவாணர்

நாட்டுவாங்கம் — திருமதி கிரிசாந்தி ரவீந்திரன்
பாட்டு — திரு. வர்ண. இராமேஸ்வரன்
திரு. கே கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்

இசை ஆர்வலர்கள், அபிமானிகள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

(26249) - மேற்படி மன்றத்தினர்.

---

கைதடி மத்தி மூர்த்தியாவத்தை
அத்திலம்புலம்

## அருள் மிகு கந்தசுவாமி கோவில்
## ஆனி உத்தரத் திருவிழா

26 — 06 — 1993

### நிகழ்ச்சிகள்

காலை 8-30 மணி தொடக்கம் 12-30 மணி வரை முருகப்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் பிற்பகல் 4-00 மணி தொடக்கம் 8-00 மணி வரை திருக்கல்யாணமும் முருகப் பெருமான் முத்துச் சப்பறத்தில் விசேட மேளக் கச்சேரிகளுடன் வீதி வலம் வருதல், அதனைத் தொடர்ந்து கலாரசிகமணி சின்னமணி குழுவினரின் வள்ளி திருமணம் என்னும் வில்லிசை நடைபெறும்.

சுழலும் சொற்போர்

பொருள்: இராமன் மேற்கொண்ட
அன்பில் விஞ்சி நிற்பவன்

அனுமன் அல்ல தசரதனே — திரு. இரா. செல்வவடிவேல்
தசரதன் அல்ல இலக்குவனே — திரு. தி. திருநந்தகுமார்
இலக்குவன் அல்ல பரதனே — திரு. க. நாகேஸ்வரன் M. A.
பரதன் அல்ல குகனே — திரு. ஆறு. திருமுருகன் B. A.
குகன் அல்ல அனுமனே — திரு. க. குமாரதாசன்

மத்தியஸ்தர்: திரு. இ. ஜெயராஜ்
(கம்பன் கழகம்)

- அடியார்கள்.

(26243)

---

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 03 — 1949
மறைவு: 27 — 05 — 1993

### சேதர் கனகராசா
(தீபன் இரும்பு வியாபார நிலையம், கைதடி.)

விதி செய்த சதியோ அப்பா!
மின்னலென உமைப் பிரிந்தோம்
யாருமே எதிர் பார்த்திராத - ஓர்
தவிப்பு உங்கள் இழப்பு
ஆறாது மாறாது என்றென்றும்
உங்கள் நினைவு.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புத் தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரிகள், மைத்துனர்மார்,
மருமக்கள்.

கைதடி தெற்கு,
கைதடி.
(26238)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## யாழ். மாநகர சபைக்கான
# புனருத்தாரண நிதியை பெற்றுத்தரக் கோரிக்கை

அரியாலை, ஜூன் 26

யாழ். மாநகர சபையின் 1993ஆம் ஆண்டிற்கு தேவைப் படும் புனருத்தாரண நிதியைப் பெற்றுத் தருமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் இங்கு வந்திருந்த அத்தியாவசிய சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் தேவநேசன் நேசையாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி நிதியை கடந்த 6 மாதங்களாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு யாழ். மாநகர சபைக்கு அனுப்பி வைக்க இழுத்தடித்து வருகின்றது. இதனால் மாநகர சபையின் அபிவிருத்தி வேலை திட்டங்கள் யாவும் பாதிக்கப் பட்டுள்ளன. யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மாநகரசபையின் வீதி விளக்குத் திட்டத்திற்கும் மேலதிக நிதியைப் பெற்றுத்தருமாறு ஆணையாளர் கேட்டுக் கொண்டார். இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக திரு. நேசையா உறுதியளித்தார். (த-17)

## புதிய அமைச்சர்கள் நியமனம்

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க புதிய கருத்திட்ட அமைச்சர் ஒருவரையும் ராஜாங்க அமைச்சர் ஒருவரையும் நியமித்துள்ளார்.

டாக்டர் பி. எம். பி. சிறில் சுற்றாடல் அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். கே. பி. ஹரிந்திரநாத் துன்வில்ல அரசியலமைப்பு அரச அலுவல்களுக்கான ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார். (த-க)

## ஆலய உற்சவங்கள்

கூழாவடி கிழக்கு ஆனைக்கோட்டை மாரியம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான இன்று பகல் மாரியம்மனுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பகல் 11 மணிக்கு வருடாந்த பொங்கல் நடைபெறும். (த-க)

○ ○ ○

யாழ். வண்ணை சிவன் கோவிலில் இன்று சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு ஆனி உத்தர விசேட அபிஷேகமும், 7 மணிக்கு நடராஜப் பெருமான் வெளிவீதி வலம் வருதலும் நடைபெறும்.

○ ○ ○

வல். வடமேற்கு நொச்சியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேகம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் இடம்பெறும். இரவு அம்பாள் வெளிவீதி உலா வருவார். (க)

○ ○ ○

கிறுப்பிட்டி தனங்கலட்டிப்பதி செல்லப்பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு தினமும் பிரம்மஸ்ரீ ச. ஈஸ்வரசர்மா தெய்வீகப் பேருரைகளை நடத்தி வருகின்றார். இன்றும், நாளையும் அவர் முறையே ''மந்திரம் ஏன்'', ''உள்ளேன் பிற தெய்வம்'' என்னும் பொருள்களில் உரையாற்றுவார். (க)

○ ○ ○

நவாலி தெற்கு சென். பீற்றர்ஸ் தேவாலய வருடாந்த நவ நாட்கள் விழா கடந்த 20 ஆம் திகதி ஞாயிறு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தினமும் மாலை 5 மணிக்கு செபமாலை, ஆராதனை, மறையுரை, திருப்பலி என்பன நடைபெறும்.

28ஆம் திகதி திங்கள் மாலை 5 மணிக்கு சற்பிரசாத ஆராதனை, சுற்றுப்பிரகாரம் ஆகியன நடைபெறும். 29ஆம் திகதி செவ்வாய் காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி நடைபெறும். (த-51)

○ ○ ○

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீதண்டாயுதபாணி பழனி ஆண்டவர் கோவிலின் வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும்.

திருவிழா நாட்களில் தினமும் மாலை 5 மணிக்கு கம்பன் கழகத்தை சேர்ந்த வ. பிரசாந்தன், ஆறு. திருமுருகன் ஆகியோர் ''கந்தன் பெருமை'' என்ற பொருளில் சொற்பொழிவாற்றுவார்கள்.

○ ○ ○

யாழ். பாண்டியன்தாழ்வு நரசிம்ம வைரவர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆனி உத்தர அபிஷேகம் நடைபெறும்.

○ ○ ○

ஆனி உத்தரத்தை முன்னிட்டு உரும்பராய் பேச்சியம்மன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு விசேட அபிஷேகம், பூஜை, கூட்டு வழிபாடு இடம்பெறும். நண்பகல் 12 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (த-154)

## பண்டிதமணி பிறந்தின விழா

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 94 ஆவது பிறந்த தின விழா நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் வாழ்த்துரையும், சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பிரார்த்தனை உரையும், பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி தொடக்க உரையும் நிகழ்த்துவார்கள்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் முன்னை நாள் தலைவர் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை பற்றி யாழ். பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் திரு. செ. பாலச்சந்திரன் அவர்களும் பண்டிதமணியின் 94ஆவது பிறந்த தினத்தை ஒட்டி மாவிட்டபுரம் பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்களும் உரை நிகழ்த்துவார்கள்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினர் நடத்திய பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை பதக்கங்கள் சூட்டுவார். யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ் பரிசளிப்பு விழா உரையை நிகழ்த்துவார்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைத் தலைவர் பண்டிதை பொன். பாக்கியம் வரவேற்புரை நிகழ்த்துவார். (க)

## நாளை

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தாரால் மாதாமாதம் நடத்தப் படும் யோகாசனக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு மின்னிவற் அதிபர் திரு. க. கனகராசா தலைமையில் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

யோகமும் நல்லொழுக்கமும் சுற்றாடல் பாதுகாப்பும் பற்றி போரூட்டைச் சேர்ந்த இர. சந்திரசேகரசர்மா, யோகிராஜன், யோகாசன கலாநிதி சுவாமி ஸ்ரீசிதானந்த சரஸ்வதி யோகி ஆகியோர் [illegible]


# சன் பிறாண்ட் இனிப்பு-ரொபி தயாரிப்புகள்

அளவெட்டி ''அளவை கொன்பக்ஷனறி வேக்ஸ்'' தயாரிப்பான

## சன் பிறாண்ட் இனிப்பு-ரொபி வகைகள்

சிறிது கால இடைவெளிக்குப் பின் மீண்டும் கீழ்க் காணும் விலாசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

— நன்றிகள்.

அளவை கொன்பக்ஷனறி வேக்ஸ்,
பரமானந்தம் மில் கட்டடம்,
தாவடி — மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில்.

(26254)


# நல்லின நெல் விதைகள் தருவிப்பதற்கு ஏற்பாடு

அதிக விளைச்சல் தரும் நல்லின விதை நெல் வகைகள் கொழும்பில் இருந்து தருவிக்கப்படவுள்ளன. எதிர்வரும் பெரும்போகத்திற்குத் தேவையான விதை நெல்லை கொழும்பில் இருந்து கப்பலில் எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

M4. BG 34 - 6, BG 350 ஆகிய நெல் இனங்களே தருவிக்கப்படவுள்ளன.

இவ்வகை விதை நெல் தேவையான விவசாயிகளிடம் இருந்து புசலுக்கு 200 ரூபா வீதம் கமநல சேவை நிலையங்கள் முற்பணத்தை அறவிட்டு வருகின்றன.

அத்துடன் விதை உருளைக் கிழங்கு மற்றும் விவசாய உள்ளீட்டுப் பொருள்களும் தருவிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-162)

# வட இல. நுண்கலை மன்ற தேர்வு விண்ணப்பபடிவங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

வட இலங்கை நுண்கலை மன்றத் தேர்வுக்கான விண்ணப்பப் பத்திரங்கள் ஜூலை 15 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பப் பத்திரங்களை யாழ். கல்வித்திணைக்களத்திலுள்ள சங்கீத சபை அறையிலும், மருதனார்மடம், சாவகச்சேரி, பண்டத்தரிப்பு, பருத்தித்துறை ஆகிய கோட்டக்கல்வி அலுவலகங்களிலும், அதேகோட்டங்களின் சித்திர பாட ஆசிரிய ஆலோசகர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை—

நடந்து முடிந்த மேற்படி தேர்வுகளில் ஆயிரக்கணக்கான தேர்வு நாடிகள் தோற்றினர். அதில் 75 சத வீதமானோர் சித்தியடைந்தனர். முதல் முறையாக 11 பேர் ஆசிரியர் தரத்தில் சித்தியடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது. (த)


புங்குடுதீவு பிட்டியம்பதி

## ஸ்ரீ காளிஹாபரமேஸ்வரி அம்பாள் ஆலய

# மஹோற்சவ தினம்

இன்று சனிக்கிழமை (26 - 06 - 93) பகல் 10-00 மணிக்கு விசேஷ ஸ்நபன அபிஷேகமும், வசந்த மண்டப பூஜையும், சிறப்புப் பொங்கல் விழாவும், யாழ்ப்பாணம், வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலயத்தில் நடைபெறவிருப்பதால், அடியார்கள் அனைவரும் இவ்விழாவில் பங்குபற்றி அம்பாளின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்:

புங்குடுதீவு பிட்டியம்பதி-
ஆலய பரிபாலன சபை.

(6290)


# முதலாம் வருட நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 | 06 |
| — | — |
| 01 | 07 |
| — | — |
| 1908 | 1992 |

அமரர்

## வயிரமுத்து பொன்னுத்துரை

(முன்னாள் உரிமையாளர் - லங்கா குவல்)

ஆண்டுத் திதி: 26 — 06 — 1993

தந்தையாய், குருவாய், தலைவனாய் எம்மை வழி நடத்தி, இன்று சிவத்தோடு கலந்து விட்ட உங்கள் இனிமையான நினைவுகள் என்றும் எம்மை விட்டகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''பொன்னார் வளவு'',
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

(6291)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 28 – 11 – 1927

உதிர்வு: 05 – 07 – 1992

அமரர்

**வயித்திலிங்கம் பொன்னம்பலம்**

திதி: 26-06—1993

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி ஆண்டு ஒன்று கழிந்தது. ஆனால் எம் நெஞ்சில் பற்றிய வேதனைத் தீ எம் இதயத்தில் என்றுமே அணையாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஊறணி,
வல்வெட்டித்துறை. (6284)

## மூளைக் காய்ச்சலுக்கு பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 26

மூளைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற ஒருவர் கடந்த புதன்கிழமை அங்கு மரணமானார்.

பொன்னாலை தெற்கைச் சேர்ந்த மணியம் தெய்வேந்திரம் (வயது 40) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார். (த-15)

## பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஐக்கிய நாணயச் சங்க சமாசத்தின், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிராந்திய சபையின் மகளிர் குழுவினர் நல்லை ஆதீனத்தில் பிரதி ஞாயிறு தோறும் பிற்பகல் 2 மணிக்கு மகளிர் பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

சிகை அலங்காரம், கோலம் போடுதல், பொம்மை செய்தல், பின்னல் வேலை, உள்ளூர் உற்பத்தியில் உணவு தயாரித்தல், தையல், கேக் ஐசிங் போன்ற பயிற்சிகள் இடம்பெறும். (த-30)

## IN MEMORIAM

**CHELLAIAH EDWIN ANANDARAJAN**

Principal St. John's College, Jaffna
1975 to 1985

Born: 31 – 01 – 1932
Departed: 26 – 06 – 1985

Fondly remembered by:
**Wife Padma, Children and family.**


Christian Theological Seminary,
Chunnakam. (6288)

## இணைப்பாளர்கள் தேவை

தனியார் கல்வி நிலையம், கல்வி அபிவிருத்திக் கழகத்திற்கும் கல்விக்கோட்ட ரீதியாக இணைப்பாளர்கள் தேவை. க. பொ. த. உயர்தரத் தேர்வில் சித்தியடைந்தவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 30 - 06 - 1993க்கு முன்னதாக நல்லூரில் அமைந்துள்ள தமிழீழக் கல்விக் கழக நடுவப்பணியகத்திற்கு சேர்ப்பிப்பதுடன் 02 - 07 - 1993 வெள்ளிக்கிழமை மு. ப. 9. 00 மணிக்கு நடைபெறவிருக்கும் நேர்முகத் தேர்வில் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்கள், அனுபவம் அல்லது மேலதிக தகைமையினை வெளிப்படுத்துவதற்கான சான்றிதழ்களுடன் சமுகம் கொடுக்கவும்.

பொறுப்பாளர்,
**தமிழீழக் கல்விக் கழகம்,**
(சி-5404) **பருத்தித்துறை வீதி, நல்லூர்.**

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| | அ. வசந்தகுமார் (வசந்தன்) | அ. அசோக்குமார் (ராசு) | அ. உதயகுமார் (தேவா) | அ. சுரேஷ்குமார் (மாந்து) | அ. செல்வகுமார் (குண்டு) |
|---|---|---|---|---|---|
| தோற்றம்: | 30 – 11 – 1976 | 18 – 03 – 1978 | 17 – 01 – 1980 | 04 – 02 – 1982 | 17 – 04 – 1984 |



| | கோ. டெனான் (திலிப்) | கோ. டெலோன் (தீபன்) | சி. கோமஸ்குமார் (கோமர்) |
|---|---|---|---|
| தோற்றம்: | 06 – 05 – 1986 | 23 – 07 – 1983 | 09 – 11 – 1954 |

**மறைவு: 26 – 06 – 1990**

**இன வெறியரின் ரொக்கட் குண்டு வீச்சில் சிக்கி அநியாயமாக பலியான இளம் மொட்டுக்கள்**

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயர் கொள்ளும்:
**குடும்பத்தினர்,**
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(சி-5325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## துணிச்சல் தேவை

தமிழ்ப் பகுதிகள் மீது— தமிழ் மக்கள் மீது—விதித்திருந்த பொருளாதாரத் தடையை அரசாங்கம் நீக்கி இருக்கிறது. அதன் விளைவாக தங்களுக்குத் தேவையான பல பாவனைப் பொருள்கள் கிடைக்கும்; தமது வாழ்க்கைச் செலவுச் சுமை பெரிதளவில் குறைந்துவிடும் என்று தமிழ்மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இவ்விடயத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக நகர மறுத்திருந்த அரசாங்கத்தை விடுதலைப் புலிகள் தமது ராஜதந்திரத்தால் அசைத்து விட்டார்கள்.

பொருளாதாரத் தடைநீக்கம் உரிய பலன் தருவதற்கு போக்குவரத்துத் தடையும் நீக்கப்பட வேண்டும். சங்குப்பிட்டி — பூநகரிப் பாதையைத் திறந்தாலாவது பொருள்கள் வேண்டியளவு வந்துசேர வசதி பிறக்கும். அரசு அது குறித்தும் சாதகமாக முடிவு செய்யவேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

ஆனால்—

தமிழர் விவகாரங்களில் வழமையாக நடப்பது போலவே பொருளாதாரத் தடையை நீக்கியது குறித்தும் தெற்கில் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. குறிப்பாக இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் பொருளாதாரத் தடை நீக்கத்துக்கு எதிர்ப்புத் தோன்றியுள்ளது. அவர்களின் எதிர்ப்புக்குக் காரணமும் உண்டு.

பொருளாதாரத் தடை நீக்கம் படையினருக்கு ஏற்பட்ட பெரும் தோல்வி என்று அவர்கள் கருதுகிறார்கள். பொருளாதாரத் தடை மூலம் விடுதலைப் புலிகளைப் பலவீனமாக்கித் தாம் வென்று விடலாம் என்று கருதினர் அது இயலவில்லையே என்ற கவலை.

இராணுவத்தினரின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தும், பெரிதுபடுத்தியும் வரும் கொழும்புப் பத்திரிகைகள் சிங்கள மக்கள் மனதில் இது விடயத்தில் விஷமூட்ட முனைவது ஆபத்தை விளைவிக்கும். அரசாங்கத்துக்கு இது சம்பந்தமாக ஒரு நெருக்கடியை தெற்கின் சில தீயசக்திகள் உருவாக்கினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எதற்கும் புதிய ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு இதுவிடயத்தில் துணிச்சல் நிறையத் தேவைப்படுகிறது. தமிழ்மக்கள் நலனில் அவருக்கு அக்கறை உண்டெனக் காட்டும் நல்லெண்ணமாக பொருளாதாரத் தடை நீக்கத்தை ஒருவகையில் கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில் சிங்கள யுத்தக் கைதிகள் இறந்துபோகாமல் தடுக்குமுகமாக அவர் எடுத்த நடவடிக்கையே, அடுத்த வளமாக வந்து தமிழர் நலனுக்கான விளைவாக உருவெடுத்திருக்கிறது.

இதனைச் சமாதானத்துக்கான ஓர் ஆரம்பமாக ஜனாதிபதி கருதுவாரானால், எவரது எதிர்ப்பையும் கணக்கில் எடுக்க வேண்டியதில்லை. இந்த ஆரம்பத்தை எவ்வாறு நாட்டின் நல்ல முடிவுக்கு இட்டுச் செல்லலாம் என்று சிந்தித்துச் செயற்பட்டால் அவர் ஒரு தேசத் தலைவனாக மிளிர்வார். இராணுவம், பத்திரிகைகள் போன்றவற்றின் எதிர்ப்புக்கு மசிந்து போனால் அவரும் வெறும் அரசியல்வாதியே.

## இன்று

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினம் தொடர்பான நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தொல்புரத்திலுள்ள சம்மேளனப் பணிமனையில் நடைபெறும்.

சம்மேளனத் தலைவர் திரு. இ. கெங்கராசா தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெறும். பிரதம விருந்தினராக திரு.க. கணேசலிங்கம் (போரூட் சுழிபுரம்) கலந்து கொள்வார். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (ஒ)

o o o

பச்சிலைப்பள்ளிப் பகுதியிலுள்ள சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை இயங்கச் செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு பளை கூட்டுறவு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெறும்.

தமிழ் மக்கள் தங்கியுள்ள

## அம்பாறை அகதி முகாம்கள்; கொடுப்பனவு நிறுத்தம்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் தங்கியுள்ள அகதிமுகாம்களுக்கான கொடுப்பனவை அரசாங்கம் நிறுத்திவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காரைதீவு விபுலானந்த முகாம், திருக்கோவில் பாலையடி விக்கினேஸ்வர முகாம் ஆகியவற்றில் சுமார் 4 ஆயிரம் தமிழர்கள் தங்கியுள்ளனர்.

இவர்கள் அம்பாறை, மல்வத்தை, வலக்காப்பிட்டி, பாலமுனை, மல்லிகைத்தீவு, திராய்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் வீரமுனை, சம்மாந்துறைப் பகுதிகளில் தமிழர்கள் மீளக் குடியேற்றப்பட்டு வருவதாகவும்—

அவர்களுக்கான நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது.

அப்பகுதிகளில் சிங்களவர்களும், முஸ்லிம்களும் அத்துமீறி குடியேற்றப்பட்டுள்ளனர் என்றும்—

அவர்களுடன் தமிழர்களும் குடியமர்த்தப்படுகின்றனர், என்றும் மேலும் கூறப்பட்டது. [ஓ]

## இலக்கிய விழாவில் இன்று

திருமறைக் கலாமன்றம் யாழ். பிரதான வீதி மன்ற அரங்கில் எடுத்திருக்கும் இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 5.30 மணிக்கு வித்துவான் க. சொக்கலிங்கம் தலைமையில் தொடங்கும்.

உரையும் கதையும் நிகழ்வில் திரு. டொமினிக் ஜீவா, க. குணராஜா, க. பாலநடராஜன், ஆ. இராஜகோபால், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் இலக்கிய விருந்தளிப்பர்.

''நீதிகாத்தான்'' இலக்கிய நாடகம் இறுதி நிகழ்ச்சியாக நடைபெறும். (உ-51)

## பாடசாலைகளில்

பாலர் கல்விக் கழகத்தின் வளர்மதி பாலர் பாடசாலையின் இரண்டாவது தடகள விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு ஆசிரியை செல்வி நித்தியலட்சுமி பொன்னையா தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக நாவலர் ம. வி. அதிபர் திரு. ஐ. துரைராஜாவும், சிறப்பு விருந்தினராக வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். கே. சண்முகலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திரு. செந்தமிழன், திரு. குட்டி ஆகியோரும் கலந்து கொள்வர். (த)

o o o

தென்மராட்சி, ஜூன் 26

சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை தேவாலய பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர் கொத்தணி அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம் கலந்து கொள்வார். [உ-117]

## அசுத்த இடங்களில் வளரும் பொன்னாங்காணி விற்பனை

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். போதனா வைத்திய சாலையின் சுற்றுப்புறமாக உள்ள மாநகர சபை வடிகாலிலும், ஏனைய கழிவு நீர் தேங்கும் பகுதிகளிலும் வளரும் பொன்னாங்காணிக் கீரை வியாபார நோக்கங்கொண்ட சிலரால் வெட்டப்பட்டு சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

சுகாதாரச் சீர்கேட்டைத் தரும் இவ்விழி செயலை எந்த குறுகிய நோக்கத்துடனும் செய்யாது, மக்களை சுகாதார முறைப்படி வாழ வழிசெய்யுமாறும் —

இதுபோன்ற கழிவிடங்களில் வளரும் ஏனைய பயிர் வகைகளையும் தரங்கெட்ட உணவு வகைகளையும் மனிதாபிமானமற்ற முறையில் மக்களுக்கு விற்பனை செய்வதை நிறுத்தும்படியும் —

கட்டுப்படாமல் தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவி வரும் இவ்வேளையில் மக்கள் இதுபோன்ற விடயங்களில் விழிப்புடன் செயல்படுமாறும் —

யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-15)

## விளையாட்டு நிகழ்வுகள்

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்ட கிரிக்கெட் ஆடுதிடலின் அங்குரார்ப்பண நிகழ்வை ஒட்டி நாளை காலை 8.30 மணிக்கு அங்கு கிரிக்கெட் ஆட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

மட்டுப்படுத்தப்பட்ட ஐம்பது ஓவர்களைக் கொண்ட இந்த சிநேகபூர்வ ஆட்டத்தில் மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்க அணியை எதிர்த்து யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதும். (உ-20)

o o o

யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று நடைபெறவிருக்கும் ஆட்டங்கள் வருமாறு:-

**17 வயதுப் பிரிவு**

★ யாழ். இந்து எதிர் ஹாட்லி — யாழ். இந்து மைதானம்.

★ சென். ஜோன்ஸ் எதிர் ஸ்கந்தா — சென். ஜோன்ஸ் மைதானம்.

★ சென் பற்றிக்ஸ் எதிர் கொக்குவில் இந்து — சென். பற்றிக்ஸ் மைதானம்.

இந்த ஆட்டங்கள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

**15 வயதுப் பிரிவு**

★ ஸ்கந்தா எதிர் சென். ஜோன்ஸ் — ஸ்கந்தா மைதானம்.

★ கொக்குவில் இந்து எதிர் சென். பற்றிக்ஸ் — கொக்குவில் இந்து மைதானம்.

இந்த ஆட்டங்கள் காலை 9 30 மணிக்கு ஆரம்பமாகும். (உ-20)

o o o

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் பெண்கள் சைக்கிளோட்டப் போட்டியும், ஆண்கள் வீதி ஓட்டப் போட்டியும் நாளை காலை 6 மணிக்கு நடைபெறும். (உ-20)

o o o

யாழ். வைக்கிங்ஸ் விளையாட்டு கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டுவரும் விலகல் முறை உதைபந்தாட்ட போட்டித் தொடரில் இன்று மாலை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- சென் மேரிஸ் அணி எதிர் பாடுமீன் ''பீ'' அணி.

★ 4.30 மணி:- பாடுமீன் ''ஏ'' அணி எதிர் சென். அன்ரனீஸ் ''ஏ'' அணி. [உ-17]

## கரும்புலிகள் நாளையொட்டி விளையாட்டுப் போட்டிகள்

### கலை, பண்பாட்டுக் கழகம் நடத்துகிறது

ஜூலை 5 கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடத்த உள்ளது.

இப்போட்டிகள் முதலில் கோட்டமட்டத்திலும் பின்னர் மாவட்ட மட்டத்திலும் நடைபெறும்.

தீவகம் மற்றும் வலிகாமம் கோட்டத்துக்கான தேர்வுகள் இம்மாதம் 26ஆம், 27ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியிலும்—

வடமராட்சிக் கோட்டத்துக்கான தேர்வுகள் இம்மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும்—

தென்மராட்சி கோட்டத்துக்கான தேர்வுகள் இம்மாதம் 29ஆம் 30ஆம் திகதிகளில் பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட திகதிகளில் விண்ணப்பிக்கப்பட்ட நாடகங்களும்—

பாரம்பரிய விளையாட்டுக்களில் கோலாட்டம், கரகம், ஆட்டக்காவடி, கும்மி என்பனவும்— நடைபெறும்.

**கிளித்தட்டு**

கிளித்தட்டு போட்டிகள் கீழ்குறிக்கப்பட்ட விவரப்படி நடைபெற உள்ளன

தென்மராட்சிக் கோட்டத்துக்கான போட்டிகள் இம்மாதம் 27ஆம், 28ஆம், 29 ஆம், 30ஆம் திகதிகளில் பிற்பகல் 3-00 மணிக்கு கைதடி மின் ஒளி விளையாட்டுக் கழகத்தில் நடைபெறும்.

தீவகம் கோட்டத்துக்கான போட்டிகள் இம்மாதம் 29 ஆம் 30ஆம் திகதிகளில் பிற்பகல் 3-00 மணிக்கு அரியாலை சாம்சன் குடியேற்றத்தில் நடைபெறும்.

வடமராட்சிக் கோட்டத்துக்கான போட்டிகள் இம்மாதம் 26ஆம், 27ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

வலிகாமம் கோட்டத்துக்கான போட்டிகள் இம்மாதம் 25ஆம், 26ஆம், 27ஆம், 28 ஆம் திகதிகளில் பிற்பகல் 3-00 மணிக்கு சண்டிலிப்பாய் கல்வளை நந்தன் விளையாட்டு மைதானம், உடுவில் அலிஸ்ரன் விளையாட்டுக் கழகம், சுன்னாகம் ஐயனார் விளையாட்டுக் கழகம், அரியாலை திருமகள் விளையாட்டுக் கழகம், அரியாலை காந்தி ஜி. விளையாட்டுக் கழகம், சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆகியவற்றில் நடைபெறும்.

சீனடி சிலம்படி, போர்த்தேங்காய் உடைத்தல் ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளும் மாவட்ட மட்டத்திலான ஒரே நிகழ்ச்சியாக ஜூலை முதலாம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

குறிப்பிட்ட நேரத்துக்கு நிகழ்ச்சியாளர்கள் சமூகமளித்தல் வேண்டும் என்றும்—

அறிவிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு நிகழ்ச்சியாளர்கள் அந்தந்த நிலையங்களில் தம்மால் வழங்கப்படும் இலக்கங்களைப் பெற்று மண்டபத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும்—

பதிவு செய்யப்படாதவர்கள் போட்டியில் பங்கு பற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும்—விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக நடுவப்பணியகம் அறிவித்துள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு விஜயரெட்ணம் (V.V)

(சுபமாலா மோட்டோர்ஸ்)

திரு. திருமதி. சு. முருகேசு அவர்களின் அன்பு மகன் விஜயரெட்ணம், 25. 6. 93 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினரும், விமலாதேவியின் அன்புக் கணவரும், விஜயமாலா (உயர்தர வகுப்பு மாணவி, இந்து மகளிர் கல்லூரி) பிரதீபா (இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஆ. நா. க. பொன்னுத்துரை, திருமதி- மங்கையர்க்கரசி, ஆகியோரின் அன்பு மருமகனும், வ. தங்கரெத்தினம், மு. ஜெயரெட்ணம், மு, குணரெட்ணம், ந. மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற மு. சண்முகரெட்ணம் (தயா), மு. பஞ்சரெட்ணம் (பாபு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (26. 6. 93) சனிக்கிழமை காலை 10. மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

14 A, அன்னசத்திரலேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி, மக்கள், வ. மகேஸ்வரன், (நியூ சுபமாலா மோட்டோர்ஸ்)

(26250)

## நவரத்தினம் புஸ்பகாந்தன்

கல்வியங்காடு கட்டப்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட நவரத்தினம் புஸ்பகாந்தன் ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

இவர் நவரத்தினம் புஸ்பரத்தினத்தின் (கனடா) அன்பு மகனும், கரம்பனை சேர்ந்த இந்திராணியின் அன்புக் கணவரும், ஜெனனியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - இராசம்மாவின் அன்பு மருமகனும், தர்மகுலசிங்கம் (கொழும்பு), நவரஞ்சினி (கனடா), நவரஞ்சன் (டென்மார்க்), கிளி (அமெரிக்கா) தவக்குமார் (கனடா), சுகுமார் (கனடா), சுகன்ஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

உறவினர்கள் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி.புஸ்பகாந்தன்

சிவகிரி
(மேதர் லேன்)
மானிப்பாய்

(6292)

## மாரியாபிள்ளை நடேசன்

மாரியாபிள்ளை நடேசன் 21-06-93 ல் கொழும்பில் காலமானார்.

இவர் வீரபத்திரர் கோவிலடி, கல்வியங் காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி. ஐயாத்துரை-நாகரத்தினத்தின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற ஆசிரியை ருக்மணிதேவியின் கணவரும், பிரம்மசுதன், ஞானசுதன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-06-93 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அ.பிரசாத்[கோபால்]

வீரபத்திரர் கோவில் ஒழுங்கை,
கல்வியங்காடு

[26258]

## திருமதி எஸ்தர் மனோன்மணி செல்லப்பா

அராலி வடக்கு செட்டியாமடத்தைச் சேர்ந்த திருமதி எஸ்தர் மனோன்மணி செல்லப்பா 25-06-1993 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற ரத்திச்செல்லப்பாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குணசேகரம் பிலிப்ஸ், தேவநாதன் பிலிப்ஸ், திருமதி நல்லம்மா புவிராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விசாகராஜன், ஜோசகராஜன், பிஸ்காவதி, காலஞ்சென்ற கேசவராஜன், பாலகராஜன், தேசிகராஜன், அரிஞ்சலாவதி (ஜேர்மனி), மல்லிகாவதி, ரீகனாவதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரட்ணதேவி, மங்களேஸ்வரி, சிவகுமாரன், புஸ்பக்குமாரி, ரஞ்சி, ரமணி, ஜெயக்குமாரன் (ஜேர்மனி), பாலச்சந்திரன், ராஜ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று சனிக்கிழமை (26-06-1993) மாலை 4-00 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி சேக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவம்:
தேசிகராஜன் செல்லப்பா

''மன நிறைவு''
அராலி வடக்கு,
செட்டியாமடம், வட்டுக்கோட்டை.

(26259)

## நாளை நடப்பவை

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் ஏழாவது தொடர் ஆய்வரங்கு வழமை போல் இம்முறையும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறும்.

இவ்வார கருப்பொருளாக ''திருமணம் எப்போது?'' என்ற பொருளில் ஆய்வுகள் நடைபெறும். ஆய்வரங்கை முன்னாள் சுங்க அதிகாரி எஸ். அழகரெட்ணம் நெறிப்படுத்துவார். (ஒ)

★ ★ ★

வலி தெற்கு மேற்கு சனசமூக நிலையங்களின் உப சமாசத்தின் ஒத்திசைவில் 'சாவரம்' இதழ் கருத்து நிகழ்வு நாளை பகல் 10 மணியளவில் மானிப்பாய் பிரதேச பொது நூலகத்தில் யாழ்மாவட்டச் சனசமூக நிலையங்களின் சம்மேளனத் தலைவர் திரு.வை. சேகராசசிங்கம் தலைமையில் நடைபெறும். ஒ

## ஐ.நா. தூதரக ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வதிவிடப் பிரதிநிதி காசீம் உர்க்கான், பாதுகாப்பு அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலஸ் ஆகிய இருவருமே இங்கு வரவிருக்கும் இரு உயர் அதிகாரிகளும் ஆவர்.

திங்கட்கிழமை பலாலி வரும் இவர்கள் இருவரும், மறுநாள் செவ்வாய் பருத்தித்துறைக்கு வந்து அங்கிருந்து யாழ். வந்தடைவர்.

அன்றைய தினம் பூநகரிப் பாதை விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் அவர்கள் பேச்சுக்களை தொடர்வர். அந்தப் பேச்சுக்களில் அ. ஐ. நா. தூதரக யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமாரும் பங்குபற்றுவார்.

எதிர் வரும் புதன்கிழமை ஐ. நா. அதிகாரிகள் சேரதீவு இறங்குதுறைப் பகுதியையும் பார்வையிடவுள்ளனர். (ஒ-3)

## தி. மு. கவிலிருந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைகளில் அவர் ஈடுபட்டு வந்ததாகவும் அதனால் தி.மு.கவின் கண்ணியத்தைப் பெறத் தவறிவிட்டார் என்றும் தி.மு. கவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

தி.மு.கவின் புதிய துணைப் பொதுச் செயலாளராக ஆற்காடு வீராசாமி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதே வேளை - தம்மை வெளியேற்றியது சட்டவிரோதமான நடவடிக்கை என்றும் தி.மு.க பொதுக் குழுவினால் மட்டுமே தம்மை பதவி நீக்கஞ் செய்ய முடியும் என்றும் நாஞ்சில் மனோகரன் தெரிவித்திருக்கிறார்.

(மற்றுமொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## அமெரிக்க...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் மசசூசட்ஸ் மாநிலத்தில் முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினரான திருமதி மேரிஹாவ் என்பவரும் கொடி ஏற்றும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்.

1970 ஆம் ஆண்டில் மசசூசட்ஸ் மாநிலத்தில் ஈழப்பிரகடனம் ஒன்று செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதே போன்ற பிரகடனம் ஒன்றை 1981ஆம் ஆண்டு அமெரிக்கா ஈழத் தமிழ்சங்கம் என்ற அமைப்பும் செய்திருந்தது. (இ 1)

## யாஸீர் விலகினார்

புதுடில்லி, ஜூன் 26

பலஸ்தீன தேசிய விடுதலை ஸ்தாபனத்தின் மத்திய குழுவின் தலைவர் யாஸீர் அரபாத் அப்பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தைப் பிளவுபடுத்தும் முயற்சி, நிதி மோசடி ஆகிய குற்றச்சாட்டுகளை யாஸீர் அரபாத் மீது ஸ்தாபனத்தின் உறுப்பினர் ஒருவர் சுமத்தியதை அடுத்தே அவர் இராஜினாமாச் செய்ததாகக் கூறப்படுகிறது. [உ-எ)

## காங்கேசன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்கள் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தவேண்டிய நிலுவைகளை அவர்களின் மே, ஜூன் மாதச் சம்பளத்தில் இருந்து கழிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் நிர்வாகம் தொழிற்சங்கத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இக்கடிதத்தை அடுத்து நிர்வாகத்துடன் பேச்சு நடத்துவதற்காக தொழிற்சங்கத்தூதுக்குழு ஒன்று கொழும்பு சென்றுள்ளது. (உ-3)

## கருணாநிதியைக்---

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கருதுகின்றனர்.

இந்நிலையில் —

பரம்பரை ஆட்சியைப் பேணும் கருணாநிதியின் ஆசையை நாஞ்சிலார் கிண்டடல் செய்திருப்பது கருணாநிதியை கோபமுறச் செய்திருக்கிறது.

தி. மு. கவில் இருந்து தாம் வெளியேற்றப்பட்டதை நாஞ்சில் மனோகான் சும்மா விட்டு விடப் போவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தி. மு. கவில் உள்ள அதிருப்தியாளர்கள் மதுரையில் இன்று கூட்டம் ஒன்றைக் கூட்ட இருக்கிறார்கள். அதில் திரு. கோபாலசாமி உரை நிகழ்த்தவிருக்கிறார். அதன் பின்னர் அதிருப்தியாளர்கள் சென்னைக்கு வந்து நாஞ்சில் மனோகரனை அவரது இல்லத்தில் சந்திக்க உள்ளனர்.

அதன் பிறகு அவர்கள் தங்கள் எதிர்கால உத்தியை வகுப்பார்கள் என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

தி. மு. கவில் ஏற்பட்டுள்ள பிளவு பற்றி கருணாநிதி கருத்து வெளியிடுகையில் மக்கள் நமக்கு எதிராக இருந்த போது நாம் ஒன்றுபட்டு இருந்தோம். மக்கள் நமக்கு ஆதரவாக வரும்போது நாம் நமது ஒற்றுமையை இழந்து விட்டோம்''—என்றார். (உ-எ]

## எங்கள் ஈரநெஞ்சின் கண்ணீர் அஞ்சலி



எங்கள் மதிப்புக்குரிய அன்பன்

## முருகேசு விஜயரத்தினம்

(வீ வி)

[சுபமாலா மோட்டோர்ஸ்]

நன்றி மறவாத நல்லியல்பு உள்ள நண்பன்
எல்லோருக்கும் இனியவை கூறும் இதயம் உள்ளவன்
நம்பி இருந்த எமை நட்டாற்றில் விட்டுப்போகிறாய்
நாங்கள் காவியங்கள் பாடவில்லை
கற்சிலைகள் எழுப்பவில்லை
கண்ணீர்தான் வடிக்கின்றோம்
உன் இறுதியாத்திரைப் பாதை நனையட்டும்
இறைவன் உன்னை இனிதாக ஏற்கட்டும்
திருவடி நிழல் உனக்குச் சுகம்செய்யட்டும்
உன்னை நாம் நெஞ்சில் நினைத்தவண்ணம்
பிரியாவிடை கூறுகிறோம்.

தகவல்:
சிவயோகராஜன்
(குடும்பத்தினர்)

14A, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(26257)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26-06-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org